மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, முறையீடுகள் வருகின்றன. முறையீடுகள் வரும்பொழுது போலீசாரை அனுப்பி அவர்களையெல்லாம் பிடித்து, புதிதாக கொண்டுவந்த சட்டத்தின்படி தண்டனைக்கு ஆளாக்கிக்கொண்டிருக்கிறோம்.

Exploration of mineral deposits

* 409 Q.—THIRU N. K. PALANISAMY :
THIRU N. DENNIS : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government approached the United Nations Development Programme Committee for taking up the mineral development in this State; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் செம்பும், யுரேனியமும் மற்ற மாநிலங்களைவிட அதிகமாக கிடைப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதை எக்ஸ்பிளாய்ட் பண்ண சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது யூ.என்.டி.பி. பற்றிய கேள்வி. அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. என். டென்னிஸ் : இதன் பயனாகத் தொழில் அபிவிருத்திக்கான மூலப் பொருள்கள் அதிகரிக்கப்பட்டு, அதன்மூலம் தொழில் அபிவிருத்தி ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆராய்ச்சியில் அப்படிப்பட்ட மூலப் பொருள்கள் கிடைக்குமானால், அவை தொழிலுக்குப் பயன்படுத்தப் படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சௌத் ஆற்காடு, தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளிலே ஆராய்ச்சி நடப்பதற்கு ஏற்பாடு ஆகியிருப்பதாக இந்த அறிக்கையிலே பார்க்கிறேன். அது சம்பந்தமாக, விவரமாக, திட்டவட்டமாக, ஏதாவது உலோகப் பொருள்களை எடுப்பதற்கு வழிவகைகள் இருக்கின்றதா ? அப்படி இருந்தால், அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

@ 120–121-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 'வெர்மிகுலைட்' வட ஆற்காட்டிலே கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலையிலே அயர்ன் ஓர் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 'சைரோகுளோர்' என்ற தாதுப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல பொருள்கள் அங்கங்கே தென்படுகின்றன. தொழில் வளர்ச்சிக்குப் போதுமான அளவுக்கு அவைகள் கிடைத்தால்தான தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ரூ. 120 லட்சம் செலவிட்டு, மூன்றாண்டு காலமாக, இந்த சர்வேயெல்லாம் நடத்தி இந்த 4 ஜில்லாக்களைப் பொறுத்த வரையில் விவரங்கள் கிடைத்திருக்கின்றனவே, குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திலே செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய கனி வளங்கள்—செம்பு 9 லட்சம் டன் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறதே, அதற்காக அரசு மத்திய அரசிடத்திலிருந்து லைசென்ஸ் வேண்டுமென்று ஏதாவது கேட்டிருக்கிறார்களா, அல்லது அவற்றை எடுத்துப் பயன்படுத்த ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மொத்தமாக இது சர்வே செய்யப்பட்டது. அங்கங்கே எந்த எந்தப் பொருள்கள் அதிகமாக கிடைக்கின்றனவோ, அதற்கு தொழில் துறையிலே நாம் முயற்சி எடுக்கிறோம். இந்த ஆராய்ச்சியிலே மிக அதிகமாக கிடைத்தது என்று தெரிய வந்தது திருவண்ணாமலையிலே அயர்ன் ஓர்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 410-ஐயும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

* 410 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் கனிவள ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கனி வள ஆராய்ச்சியை நடத்தியதுபோல், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள செஞ்சி, பாடிப்பள்ளம், சென்னூர், பாக்கம் மலைகளிலெல்லாம் கனி வளம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அங்கு மீண்டும் ஆராய்ச்சி நடத்த நமது அரசு முற்படுமா என அறிய விரும்புகிறேன்.

@ 121-122-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.